+

LIBRARY 30 NOV 2010 Eastern University, Sri Lanka.

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

மூன்றாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2010)

**SOC 302 Advanced Sociological Theory**

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. "இன்றைய சமூக ஆய்வுக்கு உகந்த வகை மாதிரி (Ideal type) தேவையானதொரு முறைமையியல் கருவி" பகுப்பாய்வு செய்க.
(20 புள்ளிகள்)

02. கார்ல் மாக்ஸினதும் (Karl Marx), எமைல் டொர்கைமினதும் (Emile Durkheim) தொழிற்பிரிப்பை ஒப்பிட்டு ஆராய்க.
(20 புள்ளிகள்)

03. "எமைல் டொர்கைம் (Emile Durkheim) தனது தற்கொலை (Suicide) எனும் நூலில் தற்கொலை விகிதத்தின் பாங்கினை விளக்குவதோடு சமூகக் காரணிகளே தற்கொலைக்கு முக்கிய காரணம் எனவும் முன் வைக்கிறார்." இக்கூற்றைப் பகுப்பாய்வு செய்க.
(20 புள்ளிகள்)

04. கார்ல் மாக்ஸ் (Karl Marx) கூறும் வர்க்கம் பற்றிய சிந்தனை சமுதாய மாற்றத்திற்கான முக்கிய உந்துதல் என்பதை ஏற்றுக்கொள்கிறீரா? எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.
(20 புள்ளிகள்)

05. ரொல்கொட் பார்சனின் (Talcott Parson) சமூக அமைப்புக் கோட்பாட்டை (Theory of Social System) விளக்கி; அது இன்றைய சமூகத்திற்குப் பொருந்துமாற்றை விபரிக்குக.
(20 புள்ளிகள்)

06. "பின் - நவீனத்துவம் என்பது நவீனத்துவத்தைத் தொடர்ந்து எழுச்சி பெற்ற சிந்தனை மரபாகும்." இக்கூற்றின் பொருத்தப்பாட்டை ஆராய்க.
(20 புள்ளிகள்)

07. 'தொழில்நுட்ப வளர்ச்சியானது பொதுக்களத்தின் (Public Sphere) சிதைவுக்கு வழிகோலுகின்றது" இதனை ஜேஜன் ஹேபர்மாஸ் (Jurgen Habermas) எடுத்துக்காட்டுமாற்றை விளக்குக.
(20 புள்ளிகள்)

08. பின்வருவன்வற்றுள் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) புறவயத்தன்மை (10 புள்ளிகள்)

(ii) இலட்சியப் பேச்சுச் சூழல் (Ideal speech situation) (10 புள்ளிகள்)

(iii) அன்னியமயமாதல் (10 புள்ளிகள்)

(iv) ∴ப்பிராங்பேட் சிந்தனைப் பள்ளி (Frankfurt School) (10 புள்ளிகள்)

**********